



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (5.1.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் 2022–2023 ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத்தொகையாக 18 கோடியே 61 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு வழங்கினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், துணை மேயர் மு.மகேஷ் குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் ஹனிஷ் சப்ரா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (5.1.2024) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள், தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (5.1.2024) தலைமைச் செயலகத்தில், இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொஹைதீன் அவர்கள் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பி.வி. அப்துல் வஹாப், நாடாளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ் கனி, மாநில பொதுச் செயலாளர் கே.ஏ.எம். முகமது அபுபக்கர், தமிழ்நாடு வக்ஃப் போர்டு தலைவர் எம். அப்துல் ரகுமான், இளைஞர் அணி தலைவர் முனவர் அலி, மாணவர் அணி தேசிய தலைவர் முகமது அர்சத் ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (5.1.2024) தலைமைச் செயலகத்தில், திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 20 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு உள்ளார்.

### நகரங்களுக்கு இணையாக

# கிராமங்களை முன்னேற்றுவதே திராவிட மாடல் ஆட்சியின் நோக்கம்!

## அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை, ஜன. 6-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியம் வேம்பபத்தூரில் ரூபாய் 25 லட்சத்து 99 ஆயிரம் மதிப்பிலான புதிய ஊராட்சி மன்ற கட்டிட திறப்பு விழா மாவட்ட ஆட்சியர்திருமதி ஆஷாஅஜித் தலைமையில் வேம்பத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் வி.எம். சமயமுத்து முன்னிலையில் நடைபெற்றது. திட்ட அலுவலர் ராம.சிவராமன் வரவேற்றுப் பேசினார் . இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் பேசியதாவது.

நகர் பகுதிகளுக்கு இணையாக கிராமப்புறங்களை மேம்பாடுஅடைய செய்ய வேண்டும் என்பதே திராவிடமாடல் நாயகர் முதல்வர் தளபதி அவர்களின் நோக்கம்ஆகும். இதற்கான முயற்சிகளை திராவிட மாடல் நாயகர் நம்முடைய முதல்வர் தளபதி அவர்கள் திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறார். கிராம வளர்ச்சியில் அக்கறை உள்ள முதல்வர் ஆட்சி நடைபெற்று வருகின்றது. விரைவில் இங்கு அண்ணா மறுமலர்ச்சி திட்டம் ரூபாய் 40 லட்சத்தில் மேற்கொள்ளப் பட உள்ளது. இங்கு சுய மகளிர் குழுக்கான தொழிற்பயிற்சி கூடம் ரூபாய் 10 லட்சத்தில் கட்டப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த ஊராட்சிக்கு வருவாய் வரி மிகவும் குறைவான தாகும். ஆனால் அரசின் சார்பில் இன்று பல கோடி ரூபாய்க்கு திட்ட பணிகள் நடைபெற்று வருகின்றது.

இதனால் ஊராட்சிக்கு புதிய சொத்து உருவாக்கப் பட் டுள்ளது. நகரங்களுக்கு மக்கள் குடியேற்றுவதை தடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலும் கிராமங்கள் முன்னேற வேண்டும் என்ற அடிப்படையிலும் முதல்வர் அவர்கள் இத்தகைய பல்வேறு திட்டங்களான சாலை வசதி, குடிநீர் வசதி, சுகாதார வசதி மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை நிறைவேற்ற வேண்டும் என்று திட்ட மிட்டு அதற்கான நிதிகளை ஒதுக்கி பணிகளும் நடைபெற்று வருகின்றது. கடந்த 10 ஆண்டுகளில் இத்தகைய திட்டங்கள் ஏதும் நடைபெறவில்லை. திராவிட மாடல்ஆட்சியின் கதாநாயகர் முதல்வர் அவர்கள் பதவி ஏற்ற நாள் முதல். தமிழகம் முழுவதிலும் இத்தகைய திட்டப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதை கிராமப்புற மக்கள் நன்றாக அறிந்து கொள்ள வேண்டும். கிராமப்புற சொத்துக்களை மக்கள் பாதுகாக்க முன்வர வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் மானாமதுரை ஒன்றிய குழு தலைவர் திருமதி லதா அண்ணாதுரை வாழ்த்துரை வழங்கினார். ஒன்றிய ஆணையாளர் ஜோசப் நன்றி கூறினார்.

இதில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், முன்னாள் எம்.எல்.ஏ. எஸ்.மாரியப்பன்கென்னடி, திருப்புவனம் பேருராட்சி மன்ற தலைவர் த.சேங்கை மாறன், ஒன்றிய துணைத் தலைவர் முத்துச்சாமி உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



புதுடெல்லியில் காங்கிரஸ் முன்னணித் தலைவர் ராகுல்காந்தி அவர்களை அவரது இல்லத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து பேசினார். அப்போது திருமதி. சோனியாகாந்தி அவர்களின் உடல் நலம் குறித்து ராகுல்காந்தியிடம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விசாரித்து அறிந்தார். இச்சந்திப்பின் போது ராகுல்காந்தி அவர்கள் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் சமீபத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட மழை வெள்ளசேதம் குறித்து கேட்டறிந்தார். இருவரும் இந்திய தேசத்தின் மதச்சார்பற்ற நெறிமுறைகளைப் பாதுகாப்பதற்கான இந்தியா கூட்டணியின் முன்னேற்றம் குறித்து அளவளாவினர்.



ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, திண்டுக்கல் மாவட்டம், பன்றிமலை ஊராட்சியில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலகவதி, ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் சிவகுருசாமி உட்பட பலர் உள்ளனர்.

### தயாநிதி மாறன் எம்.பி. - மு.க.தமிழரசு - நே.சிற்றரசு பங்கேற்பு:

# சேப்பாக்கம் பகுதி சார்பில் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நல உதவிகள் வழங்கி சிறப்புரை!

சென்னை, ஜன.6-

இந்நிகழ்ச்சி குறித்து சேப்பாக்கம் பகுதிக் கழகச் செயலாளரும், 9-வது மண்டலக் குழுத் தலைவருமான எஸ். மதன்மோகன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

சேப்பாக்கம் பகுதி தி.மு.க சார்பில் வரும் 6.1.2024 சனிக்கிழமை காலை 9 மணி அளவில் ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் பாக முகவர்கள் (BLA2), பாக உறுப்பினர்கள் (BLC) மற்றும் பகுதிக் கழக நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகளுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் திருக்கரங்களால் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் வட்டக் கழக செயலாளர்கள், பகுதி வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மகளிர் அணியினர், அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் குறிப்பாக அனைத்து வட்டங்களின் பாக முகவர்கள் மற்றும் பாக பொறுப்பாளர்களும் பெரும் திரளாக பங்கேற்குமாறு எஸ்.மதன் மோகன் கேட்டுக்கொண்டுள்ளார்.